

# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி

### இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிவுறுத்தலின் பேரில், பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைத்தளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம் 7, 8 – இல் ஏழு சட்டமன்றத் தொகுதிகளுக்கான சமூக வலைத்தளப் பயிற்சி கீழ்காணும் நாட்களில் நடைபெற இருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

| நாள் | நேரம் | மண்டலம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|---|
| 21.12.2024 சனிக்கிழமை | காலை 9.00 மணி | 7 | பட்டுக்கோட்டை | குமரன் திருமண மஹால், முத்துப்பேட்டை சாலை, பட்டுக்கோட்டை. |
| | மாலை 4.00 மணி | | அறந்தாங்கி | நூர் மஹால், கட்டுமாவடி சாலை, அறந்தாங்கி, புதுக்கோட்டை. |
| 21.12.2024 சனிக்கிழமை | காலை 9.00 மணி | 8 | திருப்பத்தூர் | காந்திமதி மஹால், சிங்கம்புனரி, சிவகங்கை. |
| | மாலை 4.00 மணி | | காரைக்குடி | அபூர்வா மஹால், காரைக்குடி |

அந்தந்த சட்டமன்றத் தொகுதி பாகங்களில், இப்பயிற்சிக்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ள இளைஞர்கள் தவறாமல், இதில் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 18-12-2024

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி

# கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை மாநில நிர்வாகிகளுக்கு!

## வாகை சந்திரசேகர் வேண்டுகோள்!

சென்னை, டிச. 21 - கழக கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை மாநில நிர்வாகிகளுக்கு மாநிலத் தலைவர் வாகை சந்திரசேகர் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு: -

நில நிர்வாகிகள் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டதற்கு இணங்க மாநில அளவிலான ஒப்பித்தல் போட்டி வரும் 4.1.2025 அன்று அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் நடைபெற உள்ளது. இதனை பள்ளிகளுக்கு தெரிவிக்கவும், மேலும், போட்டி நடத்தாமல் உள்ள மாவட்டங்களில் நடத்தி முடித்திடவும் வேண்டுகிறேன்.

மாவட்ட அளவில் தேர்வு செய்யப்பட்ட மூன்று மாணவர்களையும் சம்பந்தப்பட்ட நிர்வாகிகள் காலை 9 மணிக்குள் அரங்கத்திற்கு அழைத்து வர வேண்டுகிறேன்.

இவ்வாறு தலைவர் - கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை தலைவர் வாகை சந்திரசேகர் அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு

# "ஏன் வேண்டும் தி.மு.க." என்கிற தலைப்பில் விளக்க உரை மற்றும் நலத்திட்டஉதவிகள் வழங்கும் விழா!

சட்டமன்ற உறுப்பினர் ஜெ.கருணாநிதி அறிவிப்பு



தியாகராய நகர் தொகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளின் அட்டவணை

| நாள் | கிழமை | வட்டம் | நேரம் | இடம் | தலைமை கழக பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|---|
| 24.12.2024 | செவ்வாய்கிழமை | 134,134அ | மாலை 6 மணி | சந்திரசேகர் மண்டபம், எல்லையம்மன் கோவில் தெரு, மேற்கு மாம்பலம் | பொன்னேரி சிவா |
| 26.12.2024 | வியாழக்கிழமை | 130 | மாலை 6 மணி | ஆர்த்தி மஹால், 100 அடி சாலை, வடபழனி | சைதை சாதிக் |
| 28.12.2024 | சனிக்கிழமை | 130அ | மாலை 6 மணி | செங்குந்தர் மஹால், குமரன் காலனி, வடபழனி | சென்னை அரங்கநாதன் |
| 29.12.2024 | ஞாயிற்றுக்கிழமை | 141 | மாலை 6 மணி | ஆதித்யா மஹால், முத்துரங்கன் சாலை, தி நகர் | சந்தோஷ் ஜெய் |
| 02.01.2025 | வியாழக்கிழமை | 132 | மாலை 6 மணி | அன்னை அஞ்சுகம் சமுதாய நலக்கூடம், கோடம்பாக்கம் | சிவாஜி கிருஷ்ணமூர்த்தி |
| 03.01.2025 | வெள்ளிக்கிழமை | 131 | மாலை 6 மணி | 131வது வார்டு மாநகராட்சி அலுவலகம், மேற்குமாம்பலம் | சென்னை அரங்கநாதன் |
| 04.01.2025 | சனிக்கிழமை | 132அ | மாலை 6 மணி | அன்னை அஞ்சுகம் சமுதாய நலக்கூடம், கோடம்பாக்கம் | சைதை சாதிக் |
| 05.01.2025 | ஞாயிற்றுக்கிழமை | 141அ | மாலை 6 மணி | தக்கர் பாபா வித்யாலயா, தியாகராய நகர | பொன்னேரி சிவா |
| 06.01.2025 | திங்கட்கிழமை | 131அ | மாலை 6 மணி | கருணீர் மண்டபம், சாமியார் மடம் அருகில், கோடம்பாக்கம் | சந்தோஷ் ஜெய் |
| 07.01.2025 | செவ்வாய்கிழமை | 135அ | மாலை 6 மணி | புனித மத்தியாஸ் ஆலய வளாகம், காமராஜர் சாலை, கே.கே.நகர் | சிவாஜி கிருஷ்ணமூர்த்தி |
| 09.01.2025 | வியாழக்கிழமை | 135 | மாலை 6 மணி | பிரியதர்ஷினி ஹால், 7வது அவென்யூ, அசோக் நகர் | ஈரோடு இறைவன் |
| 10.01.2025 | வெள்ளிக்கிழமை | 133,133அ | மாலை 6 மணி | சர்.பிட்டி, தியாகராயர் கலையரங்கம், தியாகராயர் நகர் | ஈரோடு இறைவன் |

**ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ.**
தியாகராயர் நகர் சட்டமன்றத் தொகுதி

# நம்பிக்கையில்லாத் தீர்மானம் - அவமானம்!

இந்திய நாடாளுமன்ற வரலாற்றில் இதுவரை இல்லாத வகையில் குடியரசு துணைத் தலைவர் , மாநிலங்களவைத் தலைவர் ஜகதீப் தன்கருக்கு எதிராக இந்தியா கூட்டணியைச் சேர்ந்த காங்கிரஸ், தி.மு.க, சமாஜ்வாடி, ஆம் ஆத்மி உட்பட மற்ற கட்சி எம்.பி.க்கள் 60 பேர் நோட்டீஸ் கொடுத்துள்ளனர். இதுவரை மக்களவைத் தலைவருக்கு எதிராக மூன்று நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் 1954, 1966, 1987 ஆண்டுகளில் மூன்று பேருக்கு எதிராக கொண்டுவரப்பட்டது. ஆனால் அவை தோற்கடிக்கப்பட்டன.

ஆனால் சான்றோர்கள், அறிஞர்கள், அரசியல் வல்லுநர்கள் அமர்ந்திருக்கும் மாநிலங்களவை அறிவுப் பூர்வமான வாதங்கள், நாட்டின் வளத்திற்கும் மக்களின் அமைதியான வாழ்க்கைக்கும் நல்ல பல கருத்துக்களை பேசும் இடம் தான். வீண் விவாதம் அங்கு காண்பது அரிது. அறிஞர் அண்ணா, வாஜ்பாய், அத்வானி, முரசொலி மாறன் போன்ற வித்தகர்கள் அமர்ந்து விவாதம் செய்த இடமாகும்.

அந்த அவையின் தலைவர் மாண்புக்குரியவராக இருக்க வேண்டியவர். நீதி வழுவாது நடுநிலைத் தவறாது ஆளும்கட்சி எதிர்க்கட்சி என்று பாகுபாடு காட்டாது பணியாற்ற வேண்டிய பதவி. அரைகுறை ஆட்கள் அங்கு அமர்வது கடினம். அதனால் மக்களவையில் வெடிக்கும் பூகம்பங்கள் மாநிலங்களவையை பாதிக்காது. டிசம்பர் 3ஆம் தேதியன்று அவை கூடியதும் விதி 267ன்படி பல்வேறு விவகாரங்கள் குறித்து விவாதம் செய்ய 42 நோட்டீஸ்கள் தலைவர் தன்கரிடம் கொடுக்கப்பட்டன. அத்தனையையும் காரணமின்றி தன்கர் நிராகரித்தார். இங்கு தான் சர்வாதிகாரம் தலை தூக்க துவங்கியது.

கடந்த 25 ஆண்டுகளில் இவ்வளவு அதிகமான நோட்டீஸ் இவர் காலத்தில் தான் வழங்கப்பட்டுள்ளதாம். அப்படிப்பட்ட பெருமைக்குரியவர் மற்ற தலைவர்களுக்கு ஏன் வெங்கய்யா நாயுடுவிற்கு கூட கிடைக்காத இந்த வாய்ப்பை பயன்படுத்தி விவாதம் செய்ய அனுமதித்திருந்தால் நாடாளுமன்ற வரலாற்றில் நிச்சயம் இடம் பிடித்திருப்பார். ஆனால் அவரோ சங்கிலியால் பிணைக்கப்பட்ட அடிமை போல அல்லவா இருக்கிறார் என்று மக்கள் பேசிக் கொள்கிறார்கள்.

அதானி விவகாரத்திற்கு விசாரிக்கவும் விவாதம் செய்யவும் வேண்டும் என்று கொடுக்கப்பட்ட நோட்டீசும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை, நிராகரிக்கப்படுகிறது. இதே போல ஹிண்டன்பர்க் விவகாரத்திலும், ரபேல் விவகாரத்திலும் ஆதாரங்களுடன் பேச வேண்டும் என்றவுடன் ராகுல் காந்தி குறிவைத்துத் தாக்கப்பட்டார். ஏதோ ஒரு சமுதாயத்தைப் பற்றி மோசமாக பேசிவிட்டார் என்ற காரணத்தைக் கூறி வழக்கை விரைவுப் படுத்தி தண்டனை வாங்கித் தந்து மேல்முறையீடு செய்யும் முன் விரைந்து ராகுல் காந்தியின் எம்.பி. பதவியைப் பிடுங்கினர். அவரது வீட்டையும் பறித்துக் கொண்டனர்.

**வி.பி.கலைராஜன்**
கழக இலக்கிய அணிச் செயலாளர்



மீண்டும் அவர் உச்சநீதிமன்றத்தில் வழக்கு நடத்தி எம்.பி. ஆனார். இது பா.ஜ.க. அரசின் வன்மத்தின் உச்சமில்லையா? மக்கள் இவைகளையெல்லாம் நன்றாகப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

2024 தேர்தலில் அமித்ஷா 'பா.ஜ.க மட்டும் 400 இடங்கள் பிடிக்கும்' என்றார். கருத்துக்கணிப்புகளும் பிரதமர் மோடிக்கு மக்கள் தந்த வரவேற்பும் அதே நபர் 350க்கு குறையாமல் தனியே பா.ஜ.க. வெல்லுமென்றார். 15 லட்சம் தருகிறேனென்றும், 2 கோடி பேருக்கு ஆண்டுக்கு வேலையென்றும் கூறி 2014ல் ஆட்சிக்கு வந்தவர்கள் சொன்னதைச் செய்தீர்களா என்று கேட்டவுடன் நாங்கள் வெற்றி பெறுவோம் என்று நினைக்கவில்லை சும்மா ஜூம்லா (பொய்) விட்டோம் என்று பொறுப்புமிக்க அமித்ஷா, நிதின் கட்கரி, இரண்டு ஒன்றிய அமைச்சர்களும் கூறினர்.

அதனால் தான் இந்தப் பித்தலாட்ட பா.ஜ.க.வினருக்கு கடந்த தேர்தலை விட அவர்கள் எதிர்பார்ப்புகளை ஏமாற்றமடையும் வண்ணம் 240 தொகுதிகளில் மட்டுமே வெற்றி பெற வைத்தனர். ஆள்வதற்கு பெரும்பான்மை இல்லை. மைனாரிட்டி அரசாங்கமே நடக்கிறது. எந்த நேரமும் ஆட்சிக்கு ஆபத்து காத்திருக்கிறது. மரத்திற்கு மரம் தாவும் மனிதரின் முன்னோர் போல புத்தி கொண்ட பீகார் நிதிஷ்குமார் இந்திய கூட்டணியிலிருந்து இறுதி நேரத்தில் எப்படி மாறினாரோ அதேபோல் எந்த நேரமும் மாறலாம்.

ஏன் மோடியின் பதவியைக் கூட கேட்கலாம். அதனால் அள்ளி நிதி வழங்குகிறார் பீகாருக்கும், ஆந்திராவிற்கும் பல்லாயிரம் கோடிகள். தள்ளாட்டம் போடும் ஆட்சியை நடத்திக் கொண்டு இருக்கும் போதே சர்வாதிகாரத் தனத்தோடு ஒரே நாடு ஒரே தேர்தல் மசோதா கொண்டு வர நினைக்கிறார்கள். இது நிறைவேற சாத்தியமில்லை. எதிர்க்கட்சி எம்.பி.க்களுக்கு வலை வீசப் பார்ப்பார்கள் வஞ்சகர்கள். அதையும் தற்போது திரும்ப பெற்று விட்டார்கள் என்கிறது செய்தி.

அமெரிக்க நீதிமன்றத்தில் கவுதம் அதானி மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டு தகுந்த ஆதாரங்களைப் பார்த்த பின்பு நீதிமன்றம் அவருக்குப் பிடிவாரண்ட் போடப்பட்டுள்ளது. அதே வேளையில் அதானி 265 மில்லியன் டாலர் தன்னிடம் மின்சாரம் வாங்க 5 மாநிலங்களுக்கு லஞ்சம் கொடுத்துள்ளதாகவும் வழக்கில் கூறப்பட்டுள்ளது. இந்தியாவின் முக்கிய தொழிலதிபர், மோடி செல்லும் இடமெல்லாம் துணையாக செல்பவர் இந்த அதானி. இவ்வளவு பிரச்சினை நாடாளுமன்றத்தில் நடக்கும் போதே டிசம்பர் 9 ஜெய்ப்பூரில் நடந்த விழாவில் மோடியுடன் அதானி சென்றுள்ளார்.

மோடி தான் இந்நாட்டு பிரதமர் அதானி டிபெக்டோ பிரதமராக வலம் வருகிறார். பிரதமர் மோடி அயல்நாடுகளுக்கு செல்லும் போதும் அதானி உடன் செல்வார். அந்த நாட்டில் மோடியை வைத்து தொழில் தொடங்க வழிவகுத்துக் கொள்வார்.

இப்படிப்பட்ட மனிதரின் செயலால் அமெரிக்காவில் ஏற்பட்டுள்ள வழக்கும் பிடிவாரண்டும் இந்திய மக்களுக்கே தலைகுனிவை ஏற்படுத்திவிட்டதே. இந்தியாவிற்கு அவமானம் ஆகிவிட்டதே. பிரதமர் மோடியின் நண்பர் என்பதால் இதற்கு நாடாளுமன்றம் வந்து பதில் தர வேண்டியது அவரது கடமையில்லையா? எப்போதும் பேசாத நாடாளுமன்றம் வராத பிரதமர் மோடி இப்போது வாய்திறந்து தானே ஆக வேண்டும்?

2014 முதல் 2018 வரை பிரதமர் மோடி நாடாளுமன்றம் வந்தது வெறும் 19 நாட்கள் தான். 2014 முதல் 2023 வரை குடியரசுத் தலைவர் பேச்சுக்கு பிரதமர் பதில் கூற வேண்டும். அப்படி பேசியது உட்பட அவர் பேசியது 24 முறை தான். ஜவஹர்லால் நேரு இப்படித்தான் இருந்தாரா? இந்திராகாந்தி இப்படித்தான் பேசாத பிரதமராக இருந்தாரா? இவரைப் போல் பேசாத பிரதமர் இந்தியாவில் எவரும் இருந்ததில்லை. 14 பிரதமர்கள் 2014 வரை வாங்கிய கடன் வெறும் 55 லட்சம் கோடி தான். இந்த ஏழைகளை காப்பதாக வேஷமிடும் பிரதமர் மோடி இதுவரை வாங்கியுள்ள கடன் 220 லட்சம் கோடி. இது எந்த விதத்தில் நியாயம்? இவர் தான் தன்னை பெற்றோருக்கு பிறந்த பிள்ளை என்று பெருமையோடு கூறிக் கொள்ளவில்லை. ஆண்டவனின் பிள்ளையென்று கூறிக்கொண்டவர். இந்த ஆண்டவனின் பிள்ளை பிரதமர் மோடிதான் நாடாளுமன்றத்திற்கு வரவும் மறுக்கிறார். எதிர்க்கட்சிகள் கேட்கும் கேள்விகளுக்கும் பதில் தர வாய்திறக்கவும் மறுக்கிறார்.

கடந்த நாடாளுமன்றத்தில் பிரதமர் மோடியைப் பேச வைக்க நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்க்கட்சிகள் கொண்டு வந்தன. அப்படிப்பட்ட சூழலில் கண்டிப்பாக பிரதமர் மோடி பேசித்தானே ஆகவேண்டும். ஒரு பிரதமரை பேச வைக்க நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வர வேண்டிய நிலையில் தான் இந்திய நாடு இருக்கிறதே. இதைவிட கேவலம் வேறு என்ன இருக்க முடியும்.

இப்போது நடுநிலை வகிக்க வேண்டிய ஜகதீப் தன்கர் ஆளும் கட்சி அடிக்கும் தாளத்திற்கு அந்தர்பல்டி அடிப்பதையே வழக்கமாகக் கொண்டுள்ளார். அதானி பிரதமர் மோடியின் நெருங்கிய நண்பர். அவரால் உலகளவில் இந்தியா விமர்சனத்திற்கு ஆளாகியுள்ளது. இது 140 கோடி மக்களையும் தலைகவிழ வைத்துள்ளது. ஒவ்வொரு மாநிலத்திற்கும் பிரச்சனைகள் இருக்கத்தான் செய்கிறது. அதை ஏன் பேசவில்லை என்கிறார்கள் சில குறுக்குப் புத்திகாரர்கள். அந்தப் பிரச்சினைகள் உலகளவில் பேசப்படும் பிரச்சினைகள் அல்ல. அதனால் தான் அதானி பிரச்சினையைத் தொடர்ந்து எதிர்க்கட்சிகள் எழுப்பி வருகின்றன. இதை தன்கர் பேச அனுமதிக்க ஏன் மறுக்கிறார்? காரணம் மோடி பெயரும் அதில் வரும். அதைத் தவிர்க்கவே தன்கர் மறுக்கிறார்.

தற்போது மீண்டும் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டுள்ளது. தன்கருக்கு எதிராக என்றாலும் கட்டாயம் பிரதமர் மோடி நாடாளுமன்றத்திற்கு வந்து பதில் சொல்லியே ஆக வேண்டும். ஜெயில் சிங் காங்கிரஸ்காரர் தான். ஆனால் ராஜீவ்காந்திக்கு எதிராக கேள்வி கேட்க அவர் தயங்கவில்லை.

இப்படி ஜவஹர்லால் நேரு பிரதமராக இருந்தபோதும் அவருக்கு எதிரான நிலையும் எடுக்கப்பட்டுள்ளது. உடனே தன்கர் என்ன சொல்கிறார். நான் விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவன். ஜாட் சமுதாயத்தை சேர்ந்தவன் என்றெல்லாம் ஜாதி பிரச்சினையை எழுப்புகிறார். இந்த விவசாயி ஜெகதீப் தன்கர் பெரிய பொறுப்பில் இருக்கக்கூடியவர். விவசாயிகளுக்கு எதிரான வேளாண் சட்டங்களை பா.ஜ.க. அரசு கொண்டு வந்த போது என்ன செய்தார்?

ஒரு ஆண்டுக்கு மேல் மழையிலும், வெயிலிலும், பனியிலும், குளிரிலும் வீதியில் நின்று விவசாயிகள் போராடினார்களே அப்போது போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வர முயற்சித்தாரா? 726 விவசாயிகள் பலியான போது அவர்களுக்கு அஞ்சலியாவது செலுத்தினாரா? தன்கர் பிரதமர் மோடிக்கு அழுத்தம் கொடுத்தாரா?

இவர் கூறும் ஜாட் சமுதாயத்தைச் சேர்ந்தவரில் பலர் விவசாயிகள் போராட்டத்தில் கலந்து கொண்டனரே. உயிரிழுந்தவர்களில் பலர் ஜாட் சமூகத்தை சேர்ந்தவர் இருந்தனரே! அப்போது இவருக்கு சமூகம் தெரியவில்லையா? உ.பி. போன்ற சில மாநிலங்களில் தேர்தல் வந்ததால் பொய்யான வாக்குறுதிகளை தந்து விவசாயிகள் போராட்டத்தை நிறுத்த வைத்தனர்.

இப்போது மீண்டும் தங்களிடம் பொய் சொல்லி பா.ஜ.க அரசு ஏமாற்றி விட்டனர் என்று கூறி விவசாயிகள் போராடி வருகின்றனர். அவர்கள் மீது கண்ணீர் புகை குண்டுகள் வீசப்பட்டுள்ளன. தற்போதாவது விவசாயிகள் பிரச்சினையை தன்கர் பேசி தீர்க்க முயன்றதுண்டா? விவசாயி என்றும் சாதியைக் கூறியும் அற்பனத்தனமான அரசியலை குடியரசு துணைத் தலைவர் என்கிற மிகப் பொறுப்பு மிக்க பதவியில் உள்ளவர் செய்யலாமா?

அதானியை சந்திக்கவில்லை என்று தமிழ்நாடு முதல்வர், துணை முதல்வர், சம்பந்தப்பட்ட துறை அமைச்சர் செந்தில் பாலாஜி ஆகிய மூவரும் அழுத்தம் திருத்தமாக கூறிவிட்டனர். அதன்பின்னும் சகோதரி தமிழிசை இதற்கு ஆதாரம் வேண்டுமென்று கேட்கிறார். மூவரில் ஒருவரை அதானி சந்தித்ததற்கு ஆதாரம் தமிழிசை தான் தர வேண்டும்.

அதேபோல் அண்ணாமலை 'அதானி வந்தாராம் யாரையோ சந்தித்தாராம் தன்னிடம் ஆதாரம் இருக்கிறது' என்று கூறி அடம் பிடிக்கிறார். அதானியை மேற்குறிப்பிட்ட மூவரில் ஒருவர் சந்தித்தால் தான் அது சந்திப்பு. யாரையோ யாரோ சந்தித்ததற்கெல்லாம் முதல்வர் ஏன் பதில் சொல்ல வேண்டும்? பாவம் அண்ணாமலைக்கு அரவக்குறிச்சியில் சட்டமன்ற தேர்தலில் வாங்கிய அடி இன்றுவரை வலிக்கிறது போலும்.

செந்தில் பாலாஜி மீது அவருக்கிருக்கும் வன்மம் தீரவில்லை. ஜாமினில் வந்த அமைச்சர் என்று கிண்டலடிக்கிறார். பா.ஜ.க ஆட்சியில் ஜாமினில் வந்தவர்கள் பட்டியலை விடட்டுமா? அண்ணாமலையே; நீங்கள் வரும் 2026 தேர்தலில் அதே அரவக்குறிச்சி தொகுதியில் நின்று வெற்றி பெற முயலுங்கள். வீண் பேச்சு வேண்டாம்.

பாண்டிச்சேரியை பேரிடர் பாதித்த பகுதியாக அறிவித்த ஒன்றிய அரசுக்கு மழையால் மிகவும் பாதிக்கப்பட்ட தமிழ்நாடு கண்ணுக்கு தெரியவில்லையா? ஏற்கனவே கேட்ட நிவாரண நிதி ரூபாய் 37,907 கோடியில் 276 கோடி ரூபாய் மட்டுமே வழங்கியிருக்கின்றனர்.

தற்போதைய பெஞ்சல் புயலுக்கு கேட்டது 6,675 கோடி ரூபாய். இதை எப்பொழுது வழங்குவார்களோ? அண்ணாமலையே; ரேஷன் கார்டுக்கு 2000 போதாது என்கிறீரே! நீங்கள் தமிழர்தானே, கேட்டு வாங்கித் தரமுடிந்தால் தாருங்கள்.

இமாச்சலப்பிரதேசத்தில் மேக வெடிப்பால் கடும் மழை பெய்து சீரழித்தது. அங்கு கேட்ட பேரிடர் நிதியை இன்னும் வழங்கவில்லை காரணம் அங்கே நடப்பது காங்கிரஸ் ஆட்சி. பா.ஜ.க. தலைவர் நட்டா ஒன்றிய அமைச்சரும் கூட அந்த மாநிலத்தை சேர்ந்தவர் தான். ஏன் நிதியைப் பெற்று தரவில்லை. வயநாடு பிரச்சினைக்கும் இதுவரை நிதி வழங்கவில்லை. எத்தனை பேர் உயிரிழந்துள்ளார்கள் என்பது ஒன்றிய அரசுக்குத் தெரியாதா? காரணம் அங்கு நடப்பது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சி. தற்போது அங்கே பிரியங்கா வெற்றி பெற்று விட்டார் போதாதா?

மணிப்பூர் கிட்டத்தட்ட 2 வருடங்களாக எரிகிறது. அங்கு துணை ராணுவம் மற்றும் சி.ஆர்.பி.எப். காவலர்கள் 90,000 பேர் நிறுத்தப்பட்டுள்ளனர். ஆனால் கலவரமும் சிறுபான்மையினர் குக்கி மக்கள் கொல்லப்படுவதும் நிற்கவில்லை. இதற்கெல்லாம் பிரதமர் மோடி அரசு என்ன பதில் சொல்லப் போகிறது?